


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் நவம்பர் 04 * 2025 * மலர் -1 * இதழ்-155 * VOL-1 * ISSUE-155 விலை ரூ.3 * பக்கம் -4

### உலகக்கோப்பையை வென்ற

## இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு பரிசு மழை!

### கிரிக்கெட் வாரியம் ரூ.51 கோடியை அறிவித்துள்ளது!!

மும்பை, நவ.04–

ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை இறுதி ஆட்டம், நேற்று மாலை நவி மும்பையில் உள்ள டி.ஒய். பாட்டீல் கிரிக்கெட் திடலில் நடைபெற்றது. இந்தப் போட்டியில், டாஸ் வென்ற தென்னாப்பிரிக்க அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதனைத் தொடர்ந்து, களமிறங்கிய இந்திய அணியின் வீராங்கனைகள் 50 ஓவர்கள் முடிவில், 7 விக்கெட்டுகளை இழந்து 298 ரன்களை குவித்திருந்தனர். இதன்மூலம், சேஸிங்கில் களமிறங்கிய தென்னாப்பிரிக்காவுக்கு 299 ரன்கள் இலக்காக நிர்ணயிக்க ப்பட்டது. நிதானமாக விளையாடி வந்த தென்னாப்பிரிக்க அணி முதல் 25 ஓவர்களில் 4 முக்கிய விக்கெட்டுகளை இழந்தது. இருப்பினும், தென்னாப்பிரிக்காவின் கேப்டனும், தொடக்க வீராங்கனையுமானலாரா வோல்வார்ட் 98 பந்துகளில் 101 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார். தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான பந்துவீச்சில் இந்திய வீராங்கனை கள் ஷபாலி வர்மா, தீப்தி சர்மா ஆகியோர் தொடர்ச்சியாக விக்கெட்டுகளை எடுத்து அசத்தினர். இதனால், 45.3 ஓவர்கள் முடிவில் தென்னாப்பிரிக்கஅணிஅனைத்து வி க்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது. இந்த நிலையில், 52 ரன்கள் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி, இந்திய அணி ஐசிசி மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் முதல்மு றையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இதனால் இந்திய மகளிர் அணி வீராங்கனைகள் மகிழ்ச்சியில் திளைத்தனர். அவர்கள் உற்சாக மிகுதியில் மைதானத்தை வலம் வந்தார்கள். அவர்களுக்கு முக்கிய பிரமுகர்கள் வாழ்த்து தெரிவித்தனர். மேலும், சாம்பியனான இந்திய அணிக்கு ரூ.40 கோடி பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் வாரியம் ரூ.51 கோடியை பரிசு அறிவித்துள்ளது. இந்த தொகையாவும் வீராங்கனைகள், பயிற்சியாளர்கள், அணியின் பிற உதவியாளர்கள் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.




இந்த உலகக் கோப்பை போட்டியில் 2–ஆவது இடம் பெற்ற தென்னாப்பிரிக்க அணிக்கு ரூ.20 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது. அரையிறுதியில் தோற்றுப்போன 2 அணிகளுக்கு தலா ரூ.10 கோடி கிடைத்துள்ளது. மொத்தத்தில் இந்தப் போட்டியில் மொத்த பரிசுத் தொகை ரூ.123 கோடியாகும். இது 2022–ஆம் ஆண்டில் நடந்த உலக கோப்பையை விட சுமார் 4 மடங்கு கூடுதலாகும். இதனிடையே, வெற்றிபெற்ற இந்தியஅணியின்வீராங்கனைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

### தெலுங்கானாவில் பயங்கர விபத்து:

## பஸ் மீது லாரி மோதி 20 பேர் நசுங்கி சாவு!

### பலர் ஜல்லிக்கற்களுக்குள் புதைந்த பரிதாபம்!!



ஐதராபாத், நவ.4

தெலுங்கானாவில் பஸ் மீது ஜல்லிக்கற்கள் ஏற்றிச் சென்ற லாரி மோதியது. இதில் பஸ்சில் பயணம் செய்த 20 பேர் பலியானார்கள். லாரியில் இருந்த ஜல்லிக்கற்கள் பலரை மூடின. இதனால் சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்து இன்று காலை நடந்தது.

தெலுங்கானா மாநிலம் ரங்காரெட்டி மாவட்டத்தில் தாண்டூர் என்ற ஊர் உள்ளது. இங்கிருந்து தலைநகர் ஐதராபாத்துக்கு அரசுப் பேருந்து ஒன்று புறப்பட்டுச்சென்றது. இந்த பேருந்தில்சுமார் 70 பயணிகள் இருந்தனர்.

அவர்களில் பெரும்பாலோர் மாணவ–மாணவிகள் ஆவர். மேலும் வேலைக்குச் செல்பவர்களும் பயணம் செய்தனர். அத்துடன் பெண்கள், குழந்தைகளும் பயணம் செய்தனர். மாணவ–மாணவிகளில் பெரும்பாலோர் ஐதராபாத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் பயில்பவர்கள் ஆவர். அவர்கள் சனி, ஞாயிறு விடுமுறையை முன்னி ட்டு சொந்த ஊர்களுக்கு சென்றிருந்தனர். இன்று கல்லூரிக்கு திரும்பினா ர்கள். இந்தப் பேருந்து ஐதராபாத் – பிஜப்பூர் நெடுஞ்சாலையில் செவல்லா என்ற இடத்திற்கு அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது சாலையில் ஓரளவு நெரிசலும் இருந்தது. இந்த நிலையில் ஜல்லிக்கற்களை ஏற்றிக்கொண்டு டிப்பர் லாரி ஒன்று மின்னல் வேகத்தில் வந்துகொண்டிருந்தது. அந்த லாரி ஒரு மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முயன்றது. ஆனால் போதிய வழி கிடைக்கவில்லை.

வந்த வேகத்தில் பஸ் மீது பயங்கரமாக மோதியது. இதனால் பஸ் மிகக் கடுமையாக சேதம் அடைந்தது. அதன் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கின.லாரியும் சேதம் அடைந்தது. அதில் இருந்த ஜல்லிக்கற்கள் பஸ் மீது கொட்டியது. இதனால் பஸ்சில் பயணம் செய்தவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள்.முதலில் 15 பேர் பலியானதாக கூறப்பட்டது. பின்னர் 17–ஆக உயர்ந்தது. ஜல்லிக்கற்களுக்கு அடியிலும் பலர் சிக்கிக்கொண்டார்கள். அதனால் சாவு எண்ணிக்கை 20–ஆக உயர்ந்தது. இந்த விபத்து இன்று காலை 7.30 மணியளவில் நடந்தது. விபத்து நடந்ததும் அக்கம் பக்கத்தில் உள்ள மக்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் இறங்கினர். பின்னர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் விரைந்து வந்தார்கள். ஜே.சி.பி. எந்திரமும் வரவழைக்கப்பட்டது. அவற்றின் உதவியுடன் பஸ்சும், லாரியும் அப்புறப்படுத்தப்பட்டன. சம்பவ இடத்திற்கு உயர் அதிகாரிகளும் விரைந்தார்கள்.

இந்த விபத்தால் அந்தச் சாலையில் பல கி.மீ. தூரத்துக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

காயம் அடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இது வரை 15 பேர் மீட்கப்பட்டுள்ளார்கள். உயிரிழந்தவர்களில் 3 மாத பெண் குழந்தையும் அடங்கும்.

சமீபத்தில் ஆந்திராவில் பஸ் தீப்பிடித்து எரிந்ததில் 20 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



2–வது சீசனுக்காக ஊட்டி கர்நாடக பூங்காவில் தயார் செய்யப்பட்டுள்ள பிட்கோனியா மலர்கள் அங்கு வரும் சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்தது.

### கொச்சி – பெங்களூருக்கு

## வந்தே பாரத் ரெயில் விரைவில் தொடக்கம்!

### தெற்கு ரெயில்வே அறிவிப்பு!!

திருவனந்தபுரம், நவ.4

கேரளாவின் ரெயில் சேவையில் மற்றொரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில், புதிய அதிவேக சேவைக்கான அட்டவணையை தெற்கு ரெயில்வே இறுதி செய்துள்ளது. அந்த வகையில் வெளியிடப்பட்ட அட்டவணையின்படி, கொச்சி – பெங்களூர் வந்தே பாரத் ரெயில் எர்ணாகுளத்தில் இருந்து பிற்பகல் 2.20 மணிக்கு புறப்பட்டு இரவு 11 மணிக்கு பெங்களூர் நகரை அடையும். இந்த ரெயில் சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், பாலக்காடு மற்றும் திருச்சூர் ஆகிய இடங்களில் நின்று செல்லும். ஒன்பது மணி நேரத்தில் 608 கிலோமீட்டர்களை கடக்கும் இந்த சேவை தற்போதுள்ள ரெயில்களுடன் ஒப்பிடும்போது வேகமான, வசதியான பயணத்துக்கு உறுதியளிக்கிறது. ஒரு நிர்வாக வகுப்பு பயிற்சியாளர் உட்பட எட்டு பயிற்சியாளர்களைக் கொண்ட இந்த புதிய சேவை வழக்கமான பயணிகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பண்டிகை கால பயணிகளுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருவனந்தபுரம்–காசர்கோடு மற்றும் திருவனந்தபுரம் – மங்களூர் ரெயில் சேவைகளின் வெற்றிகரமானசெயல்பாட்டைத் தொடர்ந்து, கேரளாவின் வந்தே பாரத் கடற்படையின் எண்ணிக்கை மூன்றாக உயரும். இந்த ரெயிலில் அதிநவீன பாதுகாப்பு அமைப்புகள், தானியங்கி கதவுகள், சாய்ந்த இருக்கைகள்மற்றும்ஜி.பி.எஸ்அடிப்படையிலான பயணிகள் தகவல் காட்சிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த சேவை கேரளா மற்றும் கர்நாடகா இடை யே சுற்றுலா மற்றும் வணிகப் பயணத்தை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

கடந்த சில ஆண்டுகளாக, பெங்களூரில் படிக்கும் கேரள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும் வேகமான போக்குவரத்து முறை இல்லாதது குறித்து அடிக்கடி புகார்கள் எழுகின்றன. இந்த புதிய அறிவிப்பின் மூலம், புதிய சேவை சிக்கலை தீர்க்கும் என தெரிகிறது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

### வங்கிக் கடன் மோசடி எதிரொலி:

## தொழிலதிபர் அனில் அம்பானியின் ரூ.3,000 கோடி சொத்து முடக்கம்!

### அமலாக்கத்துறை அதிரடி நடவடிக்கை!!

மும்பை, நவ.4

வங்கிக்கடன்மோசடி தொடர்பாக பிரபல தொழிலதிபர் அனில் அம்பானியின் ரூ.3,000 கோடி மதிப்புள்ள சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது. இது பொருளாதாரவட்டாரத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் உள்ள பிரபல தொழில்நிறுவனங்களில்ரிலைன்ஸ் ஒன்றாகும். இந்த ரிலைன்ஸ் தொழில் குடும்பத்தின் நிர்வாக இயக்குநர் ஆக அனில் அம்பானி செயல்பட்டு வருகிறார். பல்வேறு வங்கிகளில் கடனை வாங்கி அதை மடைமாற்றம் செய்ததாக அனில் அம்பானிமீதுபுகார்எழுந்தது.ரிலைன்ஸ் காம் ரூ.13,600 கோடி நிதியை மடைமாற்றம் செய்தது என்பது பிரதானம் குற்றச்சாட்டாகும். ரிலைன்ஸ் நி றுவனம் ஏறத்தாழ ரூ.20,000வங்கிக் கடனை மோசடி செய்துள்ளது. குறிப்பாக 'ஸெஸ்' வங்கி, ரிலைன்ஸ் குழுமத்தில் முதலீடு செய்தது. மோசமான உள்நோக்கம் கொண்டது என்பதை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இவ்வி வகாரத்தில் அமலாக்கத் துறை இருக்கமானநிலைப்பாட்டை எடுத்துள்ளது. அனில் அம்பானியின் ரூ.3,000 கோடி மதிப்புள்ள சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. இதைத் தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கப்பட வாய்ப்புள்ளது என்று பொருளாதார வட்டார தகவல் தெரிவித்துள்ளது. மு ம்பை பாலிகுன்று பகுதியில் உள்ள மாளிகை, டெல்லியின் மகாராஜா ரஞ்சித் சிங் சாலையில் உள்ள ரூ.2,100 கோடி மதிப்புள்ள ரிலைன்ஸ் மையம் மற்றும் மும்பை, புனே, தானே, நொய்டா, ஐதராபாத், கிழக்கு கோதாவரி, கோவா ஆகிய இடங்களில் உள்ள சொத்துகள் காசியாபாத், நொய்டாவில் உள்ள நிலங்கள் சென்னையில் ரூ.109.6 கோடி மதிப்புள்ள 29 பிளாட்டுகள் உள்ளிட்டவை முடக்கப்பட்டுள்ளன. வங்கி மோசடி விவகாரம் தொடர்பாக மேலும் பல தொழில் நிறுவனங்கள் மீதும் அதிரடி நடவடிக்கைபாயவாய்ப்புள்ளது என்று செய்தி கசிந்துள்ளது.

### நம்பியூர் அருகே

## பைக் மோதி முதியவர் சாவு!

கோபி, நவ.4

கோபி அடுத்தநம்பியூர் அருகே உள்ள நாச்சிபாளையம் பகுதியை சேர்ந்தவர் சண்முகம் (65). போர்வெல் உரிமையாளர். இவர் திருப்பூர் அருகே உள்ள குமாரபாளையம் பகுதிக்கு துக்க நிகழ்ச்சிக்காக சென்று விட்டு மீண்டும் தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். நம்பியூர் அருகே உள்ள இச்சிபாளையம் கூட்டுறவு வங்கி முன்பு வளைவில் திரும்ப முயன்றார். அப்போது நிலை தடு மாறி சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த விபத்து எச்ச ரிக்கை பலகையில் மோட்டார் சைக்கிள் எதிர்பாராதவிதமாக மோதியது. இதில் படுகாயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தகவல் கிடைத்ததும் வரப்பாளையம் போலீ சார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சண்முகத்தின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோபி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஒரு கோடி பெயர்களை நீக்கி தேர்தலை சீர்குலைக்க சதி!

### திருமாவளவன் பரபரப்பு குற்றச்சாட்டு!!

சென்னை,நவ.4

ஒரு கோடி பெயர்களை நீக்கிதேர்தலைசீர்குலைக்க சதி நடப்பதாக திருமாவளவன் பரபரப்பு குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தம் தொடர்பாக சென்னையில் நடந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் பேசியதாவது,

பிற மாவட்டங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் புலம் பெயர்ந்து சென்று வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கள் பெயர்களை சேர்க்க பல நூறு அல்லது பல்லாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கும். அந்த அளவுக்குப் பணம் செலவு செய்து வாக்காளர் பட்டியலில் தனது பெயரைச் சேர்ப்பதற்கு அவர்கள் முயற்சி செய்வார்கள் என்று கூற முடியாது. பழங்குடி மக்கள் குறிப்பாக பழங்குடி இருளர், நரிக்குறவர் உள்ளிட்ட அலைந்து திரிந்து வாழும் பழங்குடி மக்கள் பலருக்குத் தேர்தல் ஆணையம் கேட்டிருக்கும் ஆவணங்கள் எதுவுமே கையில் இருக்க வாய்ப்பு இல்லை.



ஒவ்வொரு வாக்காளரும் 20022004 சிறப்பு வாக்காளர் பட்டியலில் இருந்த தன்னுடைய பதிவை அடையாளம் கண்டு இப்போதைய விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு ஒவ்வொருவருக்கும் நீண்ட நேரம் தேவைப்படும்.

இந்த சட்ட விரோத நடவடிக்கையை எதிர்த்துத் தான் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்து உள்ளோம். அந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் சிறப்புதீவிரதிருத்தத்துக்கு நடவடிக்கையை அறிவித்து இருப்பது நீதியை மறுப்பதாகும். தற்போதுள்ள வாக்காளர் பட்டியலை 20022004ம் ஆண்டில் எடுக்கப்பட்ட வாக்காளர் பட்டியலோடு உத்தேசமாக பொருத்திப் பார்த்ததில் சுமார் 40 விழுக்காடு வாக்காளர்களின் பெயர்களே முழுமையாகப் பொருந்துகின்றன எனக் கூறப்படுகிறது. எவ்வளவு தான் முயற்சித்தாலும் 10 முதல் 20 விழுக்காடு வாக்காளர்களின் பெயர்கள் இதில் விடுபட்டுப் போகும்.

அதாவது தமிழ்நாட்டில் சுமார் ஒரு கோடி வாக்காளர்களின் பெயர்கள் விடுபடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இது தமிழ்நாடு சட்டசபை தேர்தலை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட சதி என்று கருத வேண்டி உள்ளது. மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்த சிறப்பு தீவிர வாக்காளர்பட்டியல் திருத்த நடவடிக்கையை எதிர்க்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே அ. புதுப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணன் கோயிலில் 48 வது மண்டல பூஜையையொட்டி சிறப்பு யாகம் நடைபெற்றது. தொடர்ந்து அறுசுவை அன்னதானம் நடந்தது , இதற்கான ஏற்பாடுகளை அ.புதுப்பட்டி அகமுடையார் பெருமக்கள்மற்றும் கிராம பொது மக்கள் செய்திருந்தனர்

# கோவை எல்லை கருப்பராயன் கோவிலுக்கு துணை ஜனாதிபதி வருகை!

## போலீசார் கெடுபிடி விதிப்பதாக சர்ச்சை!!

**கோவை,நவ.4–**

கோவை மாவட்டம் காரமடை அடுத்த ஒன்னிபாளையம் பகுதியில் உள்ள எல்லை கருப்பராயன் கோவிலில் நாளை மறுநாள் 10,008 பெண்கள் கலந்து கொள்ளும் மாபெரும் திருவிளக்கு பூஜை நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர் இந்த நிகழ்ச்சியில் இந்திய துணை குடியரசு தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார்.

இந்த நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்த நிகழ்ச்சிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிப்பதற்காக கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் தலைமையில் போலீசார் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை நேற்று ஆய்வு செய்தனர். அப்போது போலீசார் சார்பில் நிகழ்ச்சி நடத்தும் நடக்கும் இடத்திற்கு மாலை 4 மணிக்கு மேல் யாரையும் அனுமதிக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

அந்த நேரத்திற்குள் விளக்கு பூஜைகள் பங்கேற்கும் பெண்கள் மற்றும் அனைத்து தரப்பினரும்தங்களது இருக்கைக்கு சென்று விட வேண்டும் என்றும் போலீசார் தரப்பில் அறிவுறுத்தப்பட்டது. அப்போது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் திறந்த வெளி மைதானத்தில் பூஜை நடைபெற உள்ளது என்றும் மதியம் 3 மணிக்கு மைதானத்தில் அமருவது என்றால் வெயிலின் தாக்கம் அதிகம் இருக்கும் என்று கூறி இருக்கின்றனர்.

அந்த நேரத்தில் பூஜையில் கலந்து கொள்வதற்கு வருபவர்கள் அங்கு வருவது சிரமம் என்றும் மாலை 5 மணி வரை நேரம் அனுமதி அளிக்க வேண்டும் என கேட்டுள்ளனர். ஆனால் அதற்கு போலீஸ் தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்முன்னேற்பாடு களை நிறுத்திவிட்டு தங்களது மற்ற பணிகளுக்கு சென்றதாக கூறப்படுகிறது. இது குறித்து கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் கூறும் போது,

நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை மட்டும் போலீசார் சென்று பார்த்துள்ளதாகவும் இன்று மத்திய பாதுகாப்பு படை அதிகாரிகள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு சென்று ஆய்வு செய்த பின்பு தான் நேரம் குறித்த தகவல்கள் தெரிவிக்கப்படும் என்றார்.

# உடுமலை பள்ளபாளையம் பகுதியில் சிதிலமடைந்த பாளையக்காரர் சிலைகள்!

## ஆய்வு செய்ய கோரிக்கை!!

**உடுமலை,நவ.4–**

தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சிக்குப்பிறகு நிலப்பகுதிகள் பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றை மேற்பார்வை செய்யபாளையக்காரர்கள் அமைக்கப்பட்டனர். 18 ஆம் நூற்றாண்டு வரை பாளையக்காரர்களின் ஆட்சி இந்த மண்ணில் இருந்துள்ளது. பின்னர் அவர்கள் ஜமீன்தார்களாகவும், நிலக்கிழார்களாகவும் மாறிவிட்டனர். உடுமலையைச்சுற்றியுள்ள பாளையத்தை ஆட்சி செய்தவர்களாகத் தோன்றுகிறது. இச்சிலை இருக்கும் ஊரின் பெயரே பள்ளபாளையம். பள்ளபாளையத்திலிருந்து சில கல் தொலைவிலேயே தளிபாளையம் இருந்திருக்கிறது. இச்சிலை பள்ளபாளையத்தைச்சேர்ந்த பாளையக்காரர்களோ, அல்லது தளி எத்தலப்ப மன்னரின் பாளையத்தை சார்ந்தவர்களாகவோ இருக்க வாய்ப்பு இருக்கிறது. சிற்பஅமைப்பை நோக்கும்போது குறைந்த பட்சம் 200 ஆண்டு கள் பழமையானதாகக் கருதலாம். இது போன்ற சிதிலமடைந்த, தனிச்சிற்பங்களை பாதுகாக்க தமிழகத் தொல்லியல் துறை ஆவன செய்ய வேண்டும் என்று உடுமலை வரலாற்று ஆய்வுநடுவத்தின்சார்பில் வேண்டுகோள் விடுக்கிறது.



பகுதிகளில் 10க்கும்மேற்பட்ட பாளையங்கள் நிர்வாகத்தில் இருந்தன. உடுமலை வட்டம் பள்ளபாளையம் ஊரின் தெற்குப்பகுதியில் சிறிய சிவன் கோயில் உள்ளது. கோயிலுக்கு வெளியே சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருக்கும் கற்சிலையில் கைகூப்பி நின்ற நிலையில் உள்ள தம்பதியினர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அவர்களது ஆடை அணிகலன் மற்றும் சிகை அலங்காரத்தை வைத்துப் பார்க்குப்போது

இதனை வரலாற்று ஆய்வுநடுவத்தின்சார்பில் அருட்செல்வன், சிவகுமார் கள ஆய்வு செய்தனர்.



கிருஷ்ணகிரியில் அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி அமைப்பது குறித்தும் கட்சி வளர்ச்சிப் பணி குறித்தும் ஆலோசனைக் கூட்டம்

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட ஓசூர் தெற்கு பகுதி

# அ.தி.மு.க. கட்சியின் சார்பில் பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்!

**கிருஷ்ணகிரி, நவ.4**

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட ஓசூர் தெற்கு பகுதி வட்டக் கழக செயலாளர் ஹேமகுமார் என்கின்ற கும்மி , தலைமையில் அதிமுக கட்சியின் சார்பில் பூத் கமிட்டி அமைப்பது குறித்தும் கட்சி வளர்ச்சிப் பணி குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்துக்கு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாநில அம்மா பேரவை மாநில இணை செயலாளர் கலசப்பாக்கம் பன்னீர்செல்வம், ஆகியோர் கலந்து கொண்டு பேசுவையில் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட தேர்தல் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் இதில், சமூக ஊடகங்களை முழுமையாக பயன்படுத்தி, கட்சி கோட்பாடுகள், வளர்ச்சி பணிகள் மற்றும் பொது மக்கள் நலத்திட்டங்களை மக்கள் மத்தியில் விரைவாக விரிவுபடுத்தும் வகையில் செயல்திட்டங்கள் குறித்து சமூக ஊடகங்களில் கட்சி

தாக்கத்தை அதிகரிக்க புதிய முயற்சிகள், வீடியோ, கிராபிக்ஸ், மெம்கள்மற்றும்நேரலை (live) நிகழ்ச்சிகள் மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவ்வை தலைவர் மாமன்ற உறுப்பினருமான நாராயணன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பாசறை மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பூத் கமிட்டி பயிற்சியாளர்கள் சேலம் மண்டலமண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் சதீஷ், சேலம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்டம் செயலாளர் பிரசன்ன, சேலம் மாவட்டதகவல்தொழில் நுட்ப பிரிவு மாவட்ட இணை செயலாளர் யாதவிரபு, மேலும்மேலும் வட்டக் கழக செயலாளர் கோபாலர் ராமச்சந்திரன், பூத் கமிட்டி கிளை கழக நிர்வாகிகள் எனக்கு கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் பாரதியார் சாலை அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 தொடர்பாக, கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்காக நடைபெற்ற பயிற்சி வகுப்பினை மாநகராட்சி ஆணையாளர் மா. சிவகுரு பிரபாகரன் பார்வையிட்டு, கணக்கெடுப்பு பணி தொடர்பான கையேடு அடங்கிய தொகுப்புகளை வழங்கினார். உடன், கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் விஜயரங்க பாண்டியன், துணை வட்டாட்சியர் குபேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

# கல்லூரி மாணவர்களுக்கு போலிச் சான்றிதழ்!

## வாலிபர் கைது; லெட்டர் பேடு, சீல் பறிமுதல்!!

**கோவை,நவ.4–**

கோவை காந்திபுரம் 2வது வீதி பகுதியில் சியாட்டில் டெக்னாலஜிஸ் என்ற நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் கல்லூரி மாணவர்களுக்கு தேவையான ப்ராஜெக்ட்களை தயார் செய்து விற்பனை செய்து வருகிறது. கடந்த மாதத்தில் இந்த நிறுவனத்திற்கு வந்த கல்லூரி மாணவர்களுக்கு ப்ராஜெக்ட்கள் மற்றும் கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள லட்சுமி வயரிங் என்ற தனியார் நிறுவனத்தில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் உள்ளிட்டவற்றை வழங்கி உள்ளனர். அந்த சான்றிதழை கல்லூரி நிர்வாகத்தினர் சரி பார்த்ததாககூறப்படுகிறது. தனியார் நிறுவனத்தில் பயிற்சி பெற்றதாக குறிப்பிடப்பட்டு இருந்த நிறுவனத்தை சம்பந்தப்பட்ட கல்லூரியில் இருந்து தொடர்பு கொண்டு பேசியுள்ளனர். அப்போது நிறுவனத்தினர் தாங்கள் அப்படி எந்த சான்றிதழையும் தரவில்லை என கூறியிருக்கின்றனர். அந்த சான்றிதழை தனியார் நிறுவனத்தினர் கேட்டு வாங்கியுள்ளனர் .பின்னர் சம்பந்தப்பட்ட மாணவர்களை விசாரித்த போது அவர்கள்காந்திபுரம்சியாட்டில் டெக்னாலஜி நிறுவனத்தில் வாங்கியதாக கூறியுள்ளனர்.இதைதொடர்ந்து தனியார் நிறுவனத்தின் மேனேஜர் அஜய்குமார் என்பவர் அந்த நிறுவனத்திற்கு சென்று தங்களுக்கும் இதே போல சான்றிதழ் வேண்டும் என கேட்டுள்ளார் .அப்போது சியாட்டில் டெக்னாலஜி நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் சபரி பிரகாஷ் என்பவர் பணத்தைப் பெற்றுக் கொண்டு சான்றிதழை கொடுத்துள்ளார். உடனே கையும் களவுமாக அவர்களை பிடித்த தனியார் நிறுவனத்தினர் காட்டூர் போலீஸ் ஸ்டேஷனில் அவர்களை ஒப்படைத்து புகார் அளித்தனர். தொடர்ந்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தை சென்று ஆய்வு செய்தனர் .அப்போது அங்கு ஏராளமான தனியார் நிறுவனங்களின் லெட்டர் பேட், சீல்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை போலீசார் கைப்பற்றினர். தொடர்ந்து சபரி பிரகாஷ் இடம் விசாரணை நடத்தினர். இதை தொடர்ந்து கோவை மாவட்டம் பொள்ளாச்சி அப்பளாங்கரை பகுதியைச் சேர்ந்த சுப்ரமணியம் என்பவரின் மகன் சபரி பிரகாஷ் (38) என்பவரை போலீசார் கைது செய்து காட்டூர் போலீசார் காப்பி ரைட் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சபரி பிரகாஷ் கடந்த சில ஆண்டுகளாக இதேபோல ஏராளமான நிறுவனங்களின் சான்றிதழ்களை போலியாக அச்சடித்து கொடுத்து ஏராளமான பணம் சம்பாதித்தாக கூறப்படுகிறது.



திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் குனிச்சி ஊராட்சியில் கந்திலி மத்திய ஒன்றிய பாமக சார்பில் புதிய உறுப்பினர் சேர்க்கை ஒன்றிய செயலாளர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. இதில் பாட்டாளி தொழிற்சங்கத்தின் மாவட்ட செயலாளர் முனிசாமி மற்றும் பாமகவினர் வீடு வீடாக சென்று புதிய உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். அதேபோன்று திருப்பத்தூர் நகர பகுதியில் நகர செயலாளர் ரகுமான் பாஷா தலைமையில் தீவிர உறுப்பினர் சேர்க்கையில் பாமகவினர் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தகாத வார்த்தைகளால் திட்டி வாலிபர் மீது தாக்குதல்!

## உறவினர்கள் 3 பேர் கைது!!

**கோவை, நவ.4–**

கோவை வீரகேரளத்தை அடுத்த நாகராஜபுரத்தை சேர்ந்தவர் நிஷாந்த் குமார் (28).

இவர் காந்திபுரம் பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள ஓட்டலில் பணிபுரிந்து வருகிறார். இவரது மனைவி பிரதிக்ஷா என்கிற சனா (25). இவர்களுக்கு ஒரு வயதில் குழந்தை உள்ளது. இந்த நிலையில் கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 2 வருடத்திற்கு முன்பு பிரிந்து வாழ்ந்து வருகிறன்றனர். நேற்று முன்தினம் பிரதிக்ஷா காந்திபுரம் சென்று தனது கணவர் நிஷாந்த் குமாரை ஓட்டலில் சந்தித்து உள்ளார். பின்னர் அவரிடம் பேச வேண்டும் என கூறி அவரை ஜிபி சிக்னல் பகுதிக்கு அழைத்து சென்றார். அங்கு ஏற்கனவே நின்றிருந்த பிரதிக்ஷாவின் தம்பி முறை உறவினர்கள் சவுரிப்பாளையத்தை சேர்ந்த ரூபன்(20), மற்றும் போத்தனூரை சேர்ந்த மருது விக்னேஷ் (24) ஆகியோர் திடீரென நிஷாந்த் குமாரிடம் தகராறில் ஈடுபட்டனர். அதில் ஆத்திரம் அடைந்த 3 பேரும் சேர்ந்து நிஷாந்த் குமாரை தகாத வார்த்தைகளால் திட்டி சரமாரியாக தாக்கினர். பின்னர் அங்கிருந்து சென்றனர். பலத்த காயம் அடைந்த நிஷாந்த் குமார் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். தொடர்ந்து நிஷாந்த் குமார் இதுகுறித்து காட்டூர் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து நிஷாந்த் குமாரை தாக்கிய அவரது மனைவி பிரதிக்ஷா என்கிற சனா மற்றும் அவரது உறவினர்கள் ரூபன், மருது விக்னேஷ் ஆகியோரை கைது செய்தனர்.

# பத்திரப்பதிவு எழுத்தர் வீட்டை உடைத்து 100 பவுன் கொள்ளை!

## 2 கிலோ வெள்ளி, ரூ.2 லட்சம் ரொக்கத்தையும் மர்ம நபர்கள் அள்ளிச் சென்றனர்!!

**திருத்தணி, நவ. 4**

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டு தாலுகாவை சேர்ந்த கர்லம்பாக்கம் கிராமத்தில் வசித்து வருபவர் பழனி இவரது மனைவி ரஜினி ஆகியோர்கள் இவர்களின் சொந்த வீட்டில் வசித்து வருகின்றனர் பழனி பத்திரப்பதிவு எழுத்தராக வேலை செய்து வருகிறார்.

பழனி அவரது மனைவி ரஜினி ஆந்திர மாநிலம் திருப்பதியில் உறவினர் திருமணத்திற்கு சென்று உள்ளார் பழனி மனைவி ரஜினி சென்றதால் பழனி தனது மகள் சாய் நந்தினி வீட்டிற்கு ஆந்திர மாநிலம் புத்தூர் அங்கு சென்றுள்ளார்.

இதனால் பழனி வீட்டில் யாரும் இல்லாததை தெரிந்து கொண்ட திருடர்கள் பழனியின் முன்பக்க வீட்டீன் கதவை உடைத்து பீரோவில் இருந்து 100 பவுன் நகை, இரண்டு



கிலோ வெள்ளி பொருட்கள், பட்டுப் புடவைகள், இரண்டு லட்ச ரூபாய் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துள்ளனர். மேலும் இவர்கள் வீட்டு மொட்டை மாடியில் உள்ள தனி அறையில் இருந்த பொருட்களை சேதம் செய்து அங்கிருந்த நகை பணத்தையும் திருடியுள்ளனர் கொள்ளையர்கள் கொள்ளையடித்துவிட்டு பின்பக்க வழியாக தப்பித்துச் சென்றுள்ளனர் முன்பக்க வழியாககதவை உடைத்து உள்ளே சென்ற கொள்ளையர்கள் பின்பக்க வழியாக சென்றுள்ளனர்.

காலையில் கதவு திறந்திருப்பது கண்டு அருகில் உள்ள பொதுமக்கள் அளித்த தகவலின் அடிப்படையில் மகள் வீட்டில் இருந்த பழனி உடனடியாக பள்ளிப்பட்டு போலீசாருக்கு தகவல் அளித்தார்.

பள்ளிப்பட்டு போலீசார் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் போன்றவற்றை வரவழைத்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் தனிப்படை போலீசாரும் இந்த சம்பவம் குறித்து இந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவை வைத்து விசாரணையில் இறங்கியுள்ளனர் அருகில் ஆந்திர மாநிலம் உள்ளதால் திருடர்கள் ஆந்திர மாநிலத்தை சேர்ந்தவர்களா அல்லது இந்த பகுதி உள்ளூர் திருடர்களா என்று கைரேகையை வைத்து தீவிர விசாரணையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

பள்ளிப்பட்டு பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் ஆந்திர மாநில ஒட்டிய பகுதி என்பதால் இங்கு தீவிர கண்காணிப்பு செய்ய போலீசார் பற்றாக்குறை இருப்ப தால் இரவு நேரத்தில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபடுவதில்லை .

இதனால் திருட்டு சம்பவங்கள் இருசக்கர வாகனங்கள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதாக இந்த பகுதி மக்கள் அதிர்ச்சியுடன் குற்றச்சாட்டு முன் வைத்துள்ளனர்.



கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் ரூ.9.67 கோடி மதிப்பில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளி தளத்துடன் கூடிய ஹாக்கி மைதானம் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore 641 001. Editor: N.JAYAPRAKASH



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சி சமுதாய கூடத்தில் சிறப்பு தீவர திருத்தம் குறித்து நடைபெற்ற வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாவட்ட வழங்கல் அலுவலர் சந்திரசேகர், விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியர் செல்வமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

# வெள்ளூரில் தலைகீழாக தொங்கும் வழிகாட்டும் ஊர் பெயர் பலகை!

**சிவகாசி, நவ.4**

சிவகாசி அருகே வெள்ளூரில் கொத்தனேரி செல்லும் ரோட்டில் வழிகாட்டும் ஊர் பெயர் பலகை தலைகீழாக இருப்பதால் வாகன ஓட்டிகள் சிரமப்படுகின்றனர். சிவகாசி அருகே வெள்ளூரில் இருந்து எம். புதுப்பட்டி, கொத்தனேரி செல்லும் ரோடு கள் பிரிந்து செல்கின்றது. குமாரபுரம், கவுண்டம்பட்டி கொத்தனேரி பிரிந்து செல்லும் ரோட்டில் வழிகாட்டும் ஊர் பெயர் பலகை உள்ளது. இந்தப் பலகை தலைகீழாகஇருப்பதோடு வழிகாட்டும் குறியீடுகளும் தவறான வழியை காட்டுகிறது.

இதனால் வெளியூர்களில் இருந்து வருகின்றவாகனஓட்டிகள் வழி தெரியாமல் வேறு ரோட்டில் சென்று விடுகின்றனர். நீண்ட துதூரம் வந்த பிறகு தவறான பாதையில் வந்தது தெரிய வருவதால் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவேபெயர்பலகையை சரி செய்ய வேண்டும் என வாகன ஓட்டிகள் எதிர்பார்க்கின்றனர்.




ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு என்எல்சி தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம், பெல் ஹோட்டல் அருகில் இருந்து பவர்லிமிடெட் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு வாக்கத்தனை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க. இளம்பகவத், கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில், முதன்மை செயல் அலுவலர், என்எல்சி தமிழ்நாடு பவர் லிமிடெட் ஆனந்த ராமானுஜம் அவர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### வாணியம்பாடி அருகே

# நண்பர்களுடன் பாலாற்றில் குளிக்க சென்ற மாணவன் நீரில் மூழ்கி பலி!

**வாணியம்பாடி,நவ.4**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த பெத்த கல்லுபள்ளி தலைவர் வட்டம் பகுதியை சேர்ந்தவர் பாஸ்கர். இவரது மகன் திலீப்(17). இவர் தொழில்நுட்ப கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார்.

இந்த நிலையில் கல்லூரி விடுமுறை என்பதால் நண்பர்களுடன் சேர்ந்து கொலையாஞ்சி பாலாற்றில் குளிக்க சென்று உள்ளார்.

அப்போது ஆழமான பகுதிக்கு சென்று நீச்சல் தெரியாததால் திலீப் நீரில் முழுகியுள்ளார். இதனை பார்த்த உடன் சென்ற நண்பர்கள் சத்தம் போட்டுள்ளனர். இவர்களின் கூக்குரல் கேட்டு அருகில் இருந்தவர்கள் உடனடியாக காவல் துறை மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.



தகவலின் பேரில் அம்பலூர் போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று நீரில் மாயமான திலீப்பை சுமார் 1 மணி நேரம் தீவிரமாக தேடி சுடலமாக மீட்டனர்.

இதனை தொடர்ந்து அம்பலூர் போலீசார் பிரேதத்தை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பாலாற்றில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற ஐ.டி.ஐ மாணவன் நீரில் மூழ்கி பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### கூடலூர் அருகே

# பைக் மீது பஸ் மோதி என்ஜீனியர் உயிரிழப்பு!

**ஊட்டி,நவ.4–**

நீலகிரி மாவட்டம் கூடலூரை அடுத்த சேரம்பாடி பகுதியை சேர்ந்தவர்சாஜி. இவரது மகன் பிரின்ஸி (33). இவர் துபாயில் என்ஜீனியராகவேலைபார்த்து வந்தார். சொந்த வேலையின் காரணமாக துபாயில் இருந்து தனது சொந்த ஊருக்கு நேற்று காலை வந்தார்.

இந்த நிலையில் நேற்று இரவு பிரின்ஸி தனது பைக்கில் சேரன்பாடி டவுனுக்கு சென்றார். சுங்கம் சோதனை சாவடி அருகே சென்ற போது அவ்வழியாக வந்த கேரளா பஸ் மீது நேருக்கு நேராக மோதியது. இதில் படுகாயமடைந்த பிரின்ஸி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த சேரன்பாடி போலீசார் பிரின்ஸி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பந்தலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து சேரன்பாடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வாணியம்பாடி ஆசிரியர் நகர் பகுதியில் வீட்டிற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனம் திருட்டு!

## சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரப்பரப்பு!!

**வாணியம்பாடி,நவ.4**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ஆசிரியர் நகர்பகுதியில் வசித்து வருபவர் நத்தர்மா முஹம்மத் நியாஸ். இவர் கடந்த மாதம் 17ஆம் தேதி மாலை 5:30 மணி அளவில் வீட்டுக்கு வெளியே தன்னுடைய இரு சக்கர வாகனம் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் சென்று உள்ளார். பின்னர் அன்று மாலை 6 மணி அளவில் பள்ளிவாசலுக்கு செல்வதற்காக வீட்டுக்கு வெளியே வந்து பார்த்த போது இருசக்கர வாகனம் காணவில்லை.



பின்னர் அருகில் உள்ள வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவு காட்சிகளை ஆய்வு செய்த போது மர்ம நபர் ஒருவர் இரு சக்கர வாகனத்தை திருடிச் செல்லும் காட்சி பதிவாகி இருந்தது.

இதனைத் தொடர்ந்து சிசிடிவி காட்சி அடிப்படையாகக் கொண்டு நகர காவல்நிலையத்தில் அவர் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவகாசி ரயில்வே மேம்பாலம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும்!

**சிவகாசி, நவ.4**

சிவகாசி ரயில்வே மேம்பாலம் விரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்குதிறக்கப்படும் என, மாணிக்கம்தாகூர் எம்பி தெரிவித்தார். சிவகாசியில் மாணிக் கம் தாகூர் எம்பி செய்தியாளர்களிடம் கூறியதாவது: சிவகாசி மக்களின் 30 ஆண்டுகால கோரிக்கையான, சிவகாசி சாட்சியாபுரம் ரயில்வே மேம்பாலம் வரக்கூடாது என்று நினைத்த முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி ஒரு பக்கம், வர வேண்டும்என்றுநினைத்த காங்கிரஸ் கட்சியும்திமுகவும் ஒருபக்கம். இது குறித்து 2020ல் நாடாளுமன்றத்தில் நான் பேசியிருக்கிறேன். அப்பொழுதும் அவர் எந்த நடவடிக்கையும்இதற்காக எடுக்கவில்லை. ரயில்வே மேம்பாலம் மிகவேகமாக முடிப்பதற்கு காரணமானவர்கள் காங்கிரஸ் சட்ட மாணிக்கம் தாகூர் எம்பி உறுதி மன்ற உறுப்பினர் அசோகனும், விருதுநகர் மாவட்ட திமுக அமைச்சர்களும் தான். விரைவில் தேர்தலுக்கு முன்பாக மீதி வேலைகளை முடித்து பாலம் திறந்து வைப்பதே எங்களது நோக்கம். தன் வீடு கட்டுவதைப் போன்று ரயில்வே மேம்பால பணிகளை தொடர்ந்து தினமும் பார்வையிட்டு வருபவர் தான் சட்டமன்ற உறுப்பினர் அசோகன். அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் மற்றும் அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னெடுப்பில் நடைபெறும் சிவகாசி சாட்சியாபுரம் ரயில்வே மேம்பாலம்மிகவிரைவில் தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட இருக்கின்றது. டெல்டாமாவட்டங்களில் நெல் மூட்டைகள் மழையால் பாதிக்கப்பட்டதில் திமுக அரசு மீது எதிர்க்கட்சிகள் குற்றசாட்டுகள் வைக்கின்றன. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு வைப்பதும் அதற்கு அரசு மற்றும் அமைச்சர்கள் பதில் சொல்வதென்பதும் பழக்கமான ஒன்று. நாங்கள் எதிர்க்கட்சியாகவும் இல்லை, அமைச்சர்களாகவும் இல்லை. இந்த விஷயத்தில் அதற்கான சரியான தீர்வு காண வேண்டும் என்பது மட்டும்தான் எங்களுடைய ஒரே கோரிக்கையாக இருக்கும். இவ்வாறு தெரிவித் தார். பேட்டியின் போது அசோகன் எம்எல்ஏ மற்றும்காங்கிரஸ்நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# போதை மாத்திரை விற்றவர் கைது!

## மற்றொருவர் தப்பியோட்டம்!!

**பவானி,நவ.4–**

பவானி அருகே லட்சுமி நகர் பகுதியில் போதை மாத்திரை விற்பனை செய்யப்படுவதாக சித்தோடு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் அங்கு சென்று போலீசார் ரோந்தில் ஈடுபட்டபோது அப்பகுதியில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்றிருந்த 2 பேரைபோலீசார் பிடிக்க முயன்றனர். அப்போது ஒருவர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். பிடிபட்டவரிடம் போலீசார் விசாரணை நடத்தியதில் தவுட்டுப்பாளையம் ஆப்பக்கூடல் பகுதியை சேர்ந்த மூர்த்தி மகன் ஜீவானந்தம் என்பது தெரியவந்தது. ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்து போதை மாத்திரைகளை வாங்கி



கல்லூரி மாணவர்கள் மற்றும் நண்பர்களுக்கு விற்பனை செய்தது தெரியவந்தது.

அவரிடம் இருந்து விற்பனைக்காக வைத்திருந்த போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து கைது செய்தனர். மேலும் தப்பியோடிய கூத்தம்பூட்டியை சேர்ந்த அரவிந்த்தை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# ராஜபாளையத்தில் மாணவர்கள் ஆதார் அட்டையை புதுப்பிக்க பள்ளிகள் கெடு!

## வங்கி முன் குழந்தைகளுடன் திரண்ட பெற்றோர்களால் பரபரப்பு!!




**ராஜபாளையம்,நவ.4**

மாணவர்கள் ஆதார் அட்டையை புதுப்பிக்க பள்ளிகள் கெடு விதித்து உள்ளதால், ராஜபாளையம் வங்கியில் உள்ள ஆதார் சேவை மையம் முன் மாணவர்களுடன் பெற்றோர் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஆதார் அட்டையில் 5 முதல் 17 வயது வரை உள்ளவர்கள் ஆதார் எண் புதுப்பிக்க கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வித்துறை சார்பில் கோடை விடுமுறையில் மாணவர்கள் ஆதார் அட்டையை புதுப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. கடந்த ஆண்டு பள்ளிகளில் 'எல்காட்' நிறுவனம் மற்றும் இல்லம் தேடி கல்வித் தன்னார்வலர்கள் மூலம் ஆதார் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் ஆதார் அட்டை புதுப்பிக்காத மாணவர்கள் அடுத்த வாரத்திற்குள் புதுப்பிக்க வேண்டும் என பள்ளிகளில் அறிவுறுத்தப்பட்டது. ராஜபாளையம் நகரில் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தபால் நிலையம், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, வட்டாட்சியர்அலுவலகம், நகராட்சி அலுவலகம் உட்பட 7 இடங்களில் ஆதார் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. நகராட்சி மற்றும் எஸ்.பி.ஐ வங்கியில் ஆதார் சேவை மையம் செயல்படவில்லை. வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள மையத்தில் ஒருவர் மட்டுமே உள்ளதால் தாமதம் நிலவுகிறது. இந்நிலையில் நேற்று காலை ராஜபாளையம் பார்க் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி முன் நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர் மாணவர்களுடன் குவிந்தனர். வங்கி திறந்ததும் 30 பேருக்கு மட்டுமே டோக்கன் வழங்கப்படும் என தெரிவித்ததால் வங்கி முன் பெற்றோர்கள் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து மக்கள் கலைந்து சென்றனர். ஆதார்அட்டை புதுப்பிக்க அவகாசம் வழங்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

### தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை

# 16 அம்ச கோரிக்கை வலியுறுத்தி திண்டுக்கல்லில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## பெண்கள் உட்பட 100 க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!!

**சென்னை,நவ.4**

கோரிக்கை நிறைவேற்ற விட்டால் சென்னையில் நவம்பர் 24ஆம் தேதி முதல் தொடர் காத்திருப்பு போராட்டம் மாநில ஒருங்கிணைப்பாளர் பேட்டி

தூய்மை காவலர்களின் மாதாந்திர ஊதியத்தை பத்தாயிரம் ஆக உயர்த்தி ஊராட்சி மூலம் ஊதியத்தை வழங்க வேண்டும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களின் பணிக்காலத்தை கருத்தில் கொண்டு சிறப்பு காலம் வரை ஊதியம் 15,000 வழங்க வேண்டும், தூய்மை காவலர்களுக்கு குடும்ப நலநிதி பிடித்தம் செய்து அவர்கள் இறப்பினை எய்தும் போது 5 லட்சம் வழங்கிட வேண்டும்,



ஊராட்சி செயலாளர்களுக்கு தேர்வுநிலை சிறப்பு நிலை தேக்க நிலை ஊதியம் வழங்கிட வேண்டும் என்பன உட்பட 16 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி இன்று 29.10.25 திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகம் அருகே தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு மக்கள் நல பணியாளர்கள் சங்கம், ஊரக வளர்ச்சி துறை கணினி உதவியாளர் சங்கம், உட்பட தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெண்கள்உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் தமிழக அரசு தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வலியுறுத்தி கையில் பதாகைகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பினர். தங்களது கோரிக்கையை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்றி தர வேண்டும் இல்லை என்றால் வருகின்ற நவம்பர் 24ம் தேதி தொடர் கால வரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவதுடன் சென்னை ஊரகவளர்ச்சித் துறை ஆணையர் அலுவலகம் முன்பு தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட போவதாகவானில் ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணி தெரிவித்தார்.

# கோவை அரசு மருத்துவமனை செவிலியர்கள் விழிப்புணர்வு பேரணி!

**கோவை,நவ.4**

கோவை அரசு மருத்துவமனை டீன் கீதாஞ்சலி, செவிலியர்கள் பங்கேற்ற மார்பக புற்று நோய் விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரண கோவை மருத்துவக்கல்லூரிமருத்துவமனையில் நேற்று நடைபெற்றது இதில்டீன் கீதாஞ்சலி தலைமை வகித்து பேரணியை தொடங்கி வைத்தார், பேரணியாக சென்றமருத்துவமாணவர்கள், டாக்டர்கள், மார்பக புற்று நோய், ஆரம்ப நிலையில் கண்டறியவதன் அவசியம், சரியான நேரத்தில் சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதன்அவசியம்குறித்து பொது மக்கள் மத்தியில் விளக்கம் அளித்தனர், மார்பகபுற்று நோய்பரிசோதனை முறைகள், நோயாளி,குடும்ப அனைவரின் ஒத்துழைப்பும் புற்று நோய்எதிர்கொள்வதில் அவசியம் என்று டீன் டாக்ட் கீதாஞ்சலி வலிறுத்தி பேசினார், பேரணியில் டாகடர் பிரபாகர்,வாழ்க்கை முறை மாற்றம்ஆபத்துகாரணிகள் குறித்து விளக்கமளித்தார், இதில்டாக்டர்கள்பாலமுருகன்,செல்வராஜ் மற்றும் அரசு மருத்துவமவை செவிலியர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# நத்தத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி முகாம்!

**நத்தம்,நவ.4**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே உள்ள அம்மா திருமண மண்டப வளாகத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது.இதற்கு மாவட்ட வழங்கல் அலுவலர் ராஜகுரு தலைமை தாங்கினார்.நத்தம் தாசில்தார் ஆறுமுகம், திண்டுக்கல் கிழக்கு தாசில்தார் பாண்டியராஜன்,தேர்தல் பிரிவு தாசில்தார் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நத்தம் சட்டமன்ற தொகுதி வாக்குசாவடி மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமில் அங்கன்வாடி பணியாளர்கள், வாக்குசாவடி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் கனவு இல்ல கட்டுமான பணிகளை ஆணையாளர் ஆய்வு!



**நத்தம், நவ.4**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே லிங்கவாடி ஊராட்சி எல். மலையூரில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் வீடுகள் கட்டும் பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில் பயனாளிகள் கட்டி வரும் இந்த பணிகளை யூனியன் ஆணையாளர் கிருஷ்ணன் ஆய்வு செய்தார். தொடர்ந்து அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுகளை சாப்பிட்டு ஆய்வு செய்த ஆணையாளர் மையத்தில் வெளியில் சுற்றி இடையூறாக உள்ள செடி, கொடிகளை அகற்ற பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆய்வு செய்த ஆணையாளர் சேதமடைந்த மேற்கூரைகளை பழுதுநீக்கம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்தார்.

இதில் ஊராட்சி செயலர் அன்புச்செல்வம் உள்ளிட்ட ஊரகவளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆய்வின் போது உடனிருந்தனர்.



சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தி.சூரக்குடி ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்திற்கான நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர்கேஆர்.பெரியகருப்பன் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த், மகளிர் திட்ட இயக்குநர் கவிதப்பிரியா,உதவிஇயக்குநர்(ஊராட்சிகள்)பிரேமராஜன்,காரைக்குடிவட்டாட்சியர்ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர்விஜயகுமார் மற்றும் அரசு துறையைச் சார்ந்த அலுவலர்கள், கிராம பொதுமக்கள் உட்பட பலர் உள்ளனர்.



ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம்வட்டம்,பொன்பரப்பிபட்டிகிராமத்தைசேர்ந்தநபர்நீரில்மூழ்கிஉயிரிழந்தமைக்கு, முதலமைச்சரின் நிவாரண நிதிக்கான காசோலை ரூ.3.00 இலட்சத்தினை வழங்கினார். உடன் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் உட்பட பலர் உள்ளனர்.

## வாணியம்பாடி அருகே

# சாலை வசதி செய்து தரக்கோரி கிராம மக்கள் வாயில் கருப்பு துணி கட்டி சாலையில் அமர்ந்து நூதண முறையில் போராட்டம்!

வாணியம்பாடி,நவ.4

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் ஒன்றியம் பூங்குளம் ஊராட்சியில் சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி கிராம மக்கள் வாயில் கருப்பு துணி கட்டி சாலையில் அமர்ந்து நூதண முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பூங்குளம் கிராமம் கிழக்கு வட்டம் வெட்



டுவானத்து அம்மன் கோயில் முதல் மத்தூரான் வட்டம் மற்றும் தாடிகாரன் வட்டம் வரை சுமார் 200 குடும்பங்கள்(1000 மக்கள்) வசித்து வருகின்றனர்.

இப் பகுதியில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு தார் சாலை போடப்பட்டது. தற்போது அந்த சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் , வயதான முதியோர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவும், விவசாய பொருட்களை சந்தைக்கு எடுத்து செல்லவும் மிகவும் சிரமமாக உள்ளது. இச்சாலை ஓரம் ஊராட்சி குப்பை கிடங்கு இருப்பதால் விஷ பூச்சிகள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. மேலும் வழியில் உள்ள பாம்பாறு தரைப்பாலத்தை வெள்ளம் மூழ்கடித்து செல்வதால் ஆபத்தான முறையில் மாணவர்கள் பள்ளிக்கு செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஆகையால் இச்சாலையை புதுப்பிக்கவும், குப்பை கிடங்கு அகற்றவும், பாம்பாறு தரை பாலம் உயரத்தை உயர்த்த கோரி பகுதி மக்கள் ஊராட்சி நிர்வாகத்திடம் பல முறை கோரிக்கை மனு கொடுத்தும் இது நாள்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால்ஆத்திரம்அடைந்தகிராமமக்கள் வெட்டுவானத்து அம்மன் சாலையில் அமர்ந்து வாய்யில் கருப்புதுணி கட்டி நூதன முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த ஆலங்காயம் போலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி இது குறித்து சம்மந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இதனை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் காணப்பட்டது.

# தோட்டக்கலைப் பண்ணையில் நாற்றுகள் விற்பனை!



கூடலூர், நவ.4–

நீர் மாவட்டம் கூடலூர் பந்தலூர் சுற்று வட்டார பகுதியில் சிருகுறு விவசாயிகள் தேயிலை காபி. இஞ்சி .மஞ்சல். குறு மிளகு என விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். இந்த விவசாயங்கள் விலை ஏற்ற தாழ்வால் பாதிக்கப்படுகின்றனர் இருந்தபோதிலும்விவசாயிகள் காலநிலை ஏற்றவாறு பயிர் செய்து தான் வருகின்றனர். இன்னிலையில்நாடுகானி பகுதியில் உள்ள தோட்டக்கலை பன்னையில் பல்வேறு நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது . இங்குஉற்பத்திசெய்யப்படும் நாற்றுகளை கேரளா மாநிலத்திலிருந்து வாங்கி செல்கின்றனர் .இன்னிலையில் இந்த வருடத்திற்கான காபி நாற்றுகளை கூடலூர், பொன்னூரில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணை, தேவாலாவில் உற்பத்தி செய்யப்பட்ட காப்பி ( அரேபிக்கா மற்றும் ரோபஸ்டா )நாற்றுக்கள்(இரகம்எஸ்.274,சிஅன் ஆர்.சந்திரகிரி) விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது.

ஒரு நாற்றின் விலை ரூ.10 ஆகும். எனவே,தேவைப்படும் விவசாயிகள் நாற்றுக்களை வாங்கி பயன் பெறலாம்.

மேலும் தொடர்புக்கு திரு.விஜய் ராஜ்,தோட்டக்கலை அலுவலர்,அரசு தோட்டக்கலைப் பண்ணை ,தேவாலா அவர்களின் கைப்பேசி எண்ணை:6369849831 தொடர்பு கொள்ளவும். என கூறியுள்ளார்.

## திருவெண்ணெய்நல்லூர் அருகே

# தென்பெண்ணை ஆற்றில் மூழ்கி 9-ம் வகுப்பு மாணவன் சாவு!

திருவெண்ணெய்நல்லூர், நவ. 4

விழுப்புரம் அருகே உள்ளபானாம்பட்டு பகுதியைச் சேர்ந்த விமல் மகன்சுஜித் என்கின்ற அஜய் (14). இவர் விழுப்புரத்தில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகின்றார். இந்நிலையில் இன்று விடுமுறை தினம் என்பதால் மாலை நண்பர்களுடன் சேர்ந்து திருவெ ண்ணெய்நல்லூர் அருகே உள்ள ஏனாதிமங்கலம் எல்லீஸ் அணைக்கட்டு தென்பெண்ணை ஆற்றில் குளித்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக நேரில் மூழ்கி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டார். அருகில் இருந்த பொதுமக்கள்



அவரை மீட்டு கரைக்கு கொண்டு பார்த்தபோது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார். தகவல் அறிந்த திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகிரி மற்றும் சப் இன்ஸ்பெக்டர் அன்பழகன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்த புகாரின் போரில் திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகிரி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றார்.

# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது!

சென்னை, நவ.4

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காலை 5.30 மணிக்கு உருவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.வங்கக்கடலில் வடகிழக்கு பருவமழை காலத்தின் 3வது காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. தெற்கு மியான்மர் கடலோர பகுதிகள் மற்றும் அதனையொட்டி வடக்கு அந்தமான் கடல் பகுதியில் மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. மேலடுக்கு சுழற்சியால் மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. வடக்கு அந்தமான் கடலில் நிலவிய மேலடுக்கு காற்று சுழற்சி வலுப்பெற்றதுஇதுஅடுத்த 48 ம ணி நேரத்தில் வடக்கு வட மேற்கு திசையில் மியான்மர் வங்கதேச கடற்கரை பகுதிகளை ஒட்டி நகரக்கூடும் என்றும் இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## கிருஷ்ணகிரி அருகே

# சின்னபனமுட்லு முத்துமாரியம்மன் கோவிலில் மண்டல பூஜை!

### வாண வேடிக்கையுடன் மாவிளக்கு ஊர்வலம்!!





கிருஷ்ணகிரி, நவ.4

மஹா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 48 நாள்களுக்கான மண்டல பூஜைகள் துவங்கியது இதில் சின்னபனமுட்லு மற்றும் பல்வேறு கிராமங்களில் இருந்து மேளத்தாளம் மற்றும் கிராமிய கலையுடன் மாவிளக்குகளுடன்பெண்கள் ஊர்வலமாக அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவிலுக்கு வந்தனர். பின்னர் மாவிளக்குகளுடன் கொண்டு வந்த பூஜைப் பொருள்களை

ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு காணிக்கையாக கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து பக்தர்கள் கொடுத்த பூஜை ப்பொருள்களைக் கொண்டு ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு. சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு வாண வேடிக்கையுடன் அம்மனுக்கு சிறப்பு பூஜைகளும் அலங்கார தீபாரனைகள் உள்ளிட்ட பல்வேறு பூஜைகளும் நடைப்பெற்றது, பின்னர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்த ஸ்ரீமுத்து மாரியம்மனைஏராளமான மக்கள் தரிசனம் செய்து வழிப்பட்டனர்.

தொடர்ந்து மண்டலப் பூஜையைத் தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

மேலும் இந்த மண்டல பூஜைக்கான ஏற்படுகளை சின்னபனமுட்லு கிராமத்தை சேர்ந்த குப்புசாமி, பெரிய முனி, மாரியப்பன், முனியம்மாள், சின்னதம்பி, அண்ணாமலை, ஜெயராமன் கோவில் பூசால்பிரகாசம் ஆகியோர சிறப்பாக செய்து இருந்தனர்.

# ராமேசுவரம் மீனவர்கள் துப்பாக்கி முனையில் விரட்டியடிப்பு!

சென்னை, நவ.4

ராமேசுவரம்மீனவர்கள்மீது தொடர்ச்சியாக இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவது, சிறை பிடிப்பது, விரட்டி அடிப்பது போன்ற சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளது இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மீன்பிடி தொழில் நலிவடைந்து வருகிறது. இதை தடுக்க வேண்டிய மத்திய அரசு எந்த வித நடவடிக்கை எடுக்காமல் இலங்கை அரசுடன் சேர்ந்து வேடிக்கை பார்த்து வருகிறது இதனால் ராமேஸ்வரம் மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ராமேசு வரம் மீன் பிடித்து துறைமுகத்திலிருந்து நேற்று காலை 500க்கும் மேற்பட்ட விசைப்படையில் 2500 க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்று கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படை வீரர்கள் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் தடுத்து நிறுத்தி துப்பாக்கி முனையில் விரட்டியடித்துள்ளனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், வார்டு எண்.72க்குட்பட்ட திவான் பகதூர் சாலையில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இணையத் தொழிலாளர் கூடத்தினை மாநகராட்சி ஆணையாளர் .மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மதிப்பிற்குரிய துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், தலைமைப் பொறியாளர் .விஜயகுமார், முன்னாள் பேரூராட்சி தலைவர் .தொண்டாமுத்தூர் ரவி, மேற்கு மண்டல தலைவர் மதி.தெய்வயானைதமிழ்மறை, உதவி ஆணையர் .துரைமுருகன், துணை மாநகர பொறியாளர் இளங்கோவன், உதவி செயற்பொறியாளர் மதி.சவிதா, தொழிலாளர் நல ஆணையர் மதி.சாந்தி, மாமன்ற உறுப்பினர் .கார்த்திக் செல்வராஜ், மண்டலசுகாதாரஅலுவலர்.வீரன்,உதவிபொறியாளர்.கமலக்கண்ணன்மற்றும்மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.





விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சி சமுதாய கூடத்தில் சிறப்பு தீவர திருத்தம் குறித்து நடைபெற்ற வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர்ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாவட்ட வழங்கல் அலுவலர்சந்திரசேகர், விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியர்செல்வமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வெங்கடசமுத்திரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 4 ஆண்டு காலமாக, சாலை, தெருவிளக்கு, குடிநீர் குழாய், கழிவுநீர் கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் செய்து தரவில்லை. இதுகுறித்து அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும், இதுவரையில் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை, மேலும் வெங்கடசமுத்திரம் ஊராட்சிமன்ற தலைவரை கண்டித்து கிராம சபா கூட்டத்தை புறக்கணித்து, வெங்கடசமுத்திரம் கூட்டுச்சாலையில் அப்பகுதி மக்கள் 100க்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.



சேலம் 56, 57–வது வார்டுகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீதான ஆணைகளை பயனாளிகளிடம் அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார். நிகழ்ச்சியில் மேயர் ராமச்சந்திரன், ஆணையாளர் இளங்கோவன், மாநகராட்சி சுகாதார பணிக்குழு தலைவர் சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பந்தலூர் அரசு மேல்நிலைப் பள்ளி என்.சி.சி முகாமில் நுகர்வோர் விழிப்புணர்வு கருத்தரங்கு!

கூடலூர் நவ.4

பந்தலூர் அரசு மேல்நிலை பள்ளியில் நாட்டு நலப்பணி திட்ட நடந்து வரும் முகாமில் முதல்நாளில் நுகர்வோர் விழிப்புணர்வு தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. பள்ளி கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் செந்தில் தலைமை தாங்கினார். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் நந்த கோபால், சமூக ஆர்வலர்கள் இந்திரஜித், பீட்டர், சிவகாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது வணிக நிறுவனங்கள் தங்கள் தயாரிப்பு பொருட்கள்தரம் என்கிற அடிப்படையில் பொய்யான தகவல்களை சேர்த்து விளம்பரம் செய்கின்றனர். தரமற்ற பொருட்களுக்குசினிமா, விளையாட்டு பிரபலங்கள் மூலம் மிகைப்படுத்தி விளம்பரம் செய்வதன் மூலம் மக்கள் மத்தியில் திணிக்கிறது. விளம்ப ரங்களில் உள்ள தகவல்கள் உண்மையா, நமக்கு அந்த பொருளின் தேவையா என்பதை அறிந்து பயன்படுத்த வேண்டும். உணவுகளில் ஊட்டச்சத்து உணவுகளை தேர்வு செய்ய வேண்டும். ஊட்டச்சத்து பணங்களில் சேர்க்கப்பட்டுள்ள அதிக சர்க்கரை, கொழுப்பு, இரசாயனங்கள் அளவுகள் அதிகரித்து உள்ளது. இதனால் உடலில் சர்க்கரை கொழுப்பு



சேர்ந்துபாதிப்பைஏற்படுத்தும்.இவற்றை தவிர்க்க வேண்டும். கறி கோழி மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படும் முட்டை, மரபானு மாற்றப்பட்ட காய்கறிகளில் உயிர்மை சத்துகள் இருக்காது. இவற்றை தவிர்த்து ஊட்டச்சத்து மிக்க சிறுதானிய உணவுகள் அதிகம் எடுத்து கொள்ள வேண்டும் என்றார்.

நுகர்வோர் பாதுகாப்பு மைய துணை தலைவர் நாராயணன் பேசும்போது மாணவ பருவத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நல்ல பண்புகளை உருவாக்கி கொள்ள வேண்டும். எந்த பொருளைவாங்கினாலும் பொருட்களின் தயாரிப்பு தேதி, நிறுவனம், கலாவதி தேதி, ஊட்டச்சத்து விவரங்கள், எடை, விலை உள்ளிட்ட தகவல்களை பார்த்து வாங்க வேண்டும். கலப்பட உணவுகள், தரமற்ற உணவுகள் விற்பனை செய்வதை அறிந்தால் உணவு பாதுகாப்பு துறைக்கு புகார் அளிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.